



admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 354 | 4 Pages | 20.7.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 354 | 4 பக்கங்கள் | 20.7.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்**

**உற்றார்க் குடம்பும் மிகை**

**விளக்கம்:**

**பிறவித் துன்பத்தைப் போக்க முயல்கின்றவர்க்கு உடம்பும் மிகையான பொருள் ஆகையால் அதற்கு மேல் வேறு தொடர்பு கொள்வது ஏனோ.**

## தமிழகத்தில் சுற்றுப்பயணம்: ராஜேந்திர சோழனின் நினைவு நாணயத்தை வெளியிடுகிறார் பிரதமர் மோடி



சென்னை, ஜூலை 19

அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் வரும் 27ம் தேதி நடைபெற உள்ள ராஜேந்திர சோழனின் 1000ம் ஆண்டு நினைவு நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்பார் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இதையொட்டி, அரசியல் களம் இப்போதே சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது. ஆளும் தி.மு.க. அரசின் கூட்டணி எந்தவித மாற்றமும் இன்றி நிலைத்து வருகிறது. அதேநேரம், எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வுடன் பா.ஜனதா கூட்டணி அமைத்திருக்கிறது. இந்த கூட்டணியில் மேலும் பல கட்சிகள் இணையும் என்று மத்திய மந்திரி அமித்ஷாவும், அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியும் உறுதிபட தெரிவித்து வருகிறார்கள்.

இந்த சூழலில், தி.மு.க தலைவரும், முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலின், மாவட்டங்கள்தோறும் சென்று மக்களை சந்தித்து வருகிறார். அதேபோல், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, 'மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்று, தனது தேர்தல் சுற்றுப்பயணத்தை தொடங்கி மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில், பிரதமர் மோடியும் தமிழகத்துக்கு சுற்றுப்பயணம் வந்து சில நிகழ்வுகளில் பங்கெடுக்க உள்ளார். இதன்படி கங்கை கொண்ட சோழபுரத்தில் வருகிற 27ந் தேதி ராஜேந்திர சோழனின் பிறந்த நாள் விழா, ஆடித் திருவாதிரை விழாவாக கோலாகலமாக கொண்டாடப்பட இருக்கிறது. கண்காட்சி நிகழ்ச்சியும் நடத்தப்பட உள்ளது. இந்த விழாவில், பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

இதுகுறித்து பா.ஜனதா வட்டாரங்கள் கூறுகையில், 'கேரளாவில் வருகிற 26ந் தேதி நடைபெறும் அரசு விழாவில் அவர் பங்கேற்றுவிட்டு, பின்னர் அங்கிருந்து தமிழகத்திற்கு பிரதமர் மோடி வருகை தருகிறார். அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் 27ந் தேதி நடைபெறும் ராஜேந்திர சோழனின் பிறந்த நாள் விழாவான, ஆடி திருவாதிரை விழாவில் சிறப்பு விருந்தினராக பிரதமர் மோடி பங்கேற்கிறார்.

இந்த விழாவானது, ராஜேந்திர சோழனின் பிறந்த நாள் விழா, கங்கை கொண்ட சோழபுரம் கோவிலை கட்டத் தொடங்கிய ஆயிரமாவது ஆண்டு விழா மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படையெடுத்துச் சென்ற ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழா ஆகியவற்றையும் இணைத்து முப்பெரும் விழாவாக இந்த விழா நடைபெற இருக்கிறது. விழாவில், ராஜேந்திர சோழன் நினைவு நாணயத்தை பிரதமர் மோடி வெளியிடுகிறார்.

மேலும், இந்த விழாவில், இசையமைப்பாளர் இளையராஜாவின் இசை நிகழ்ச்சியும் நடக்கிறது. மேலும், பல்வேறு தலைவர்களும் இந்த விழாவில் பங்கேற்க இருக்கிறார்கள். பிரதமர் மோடி வருகையையொட்டி, அரியலூர், தஞ்சாவூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன' என்று தெரிவித்தன.

இந்த விழாவில், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினும் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரியலூரில் நடைபெறும் விழாவில் பங்கேற்றுவிட்டு, தஞ்சாவூர், பெரம்பலூர் மாவட்டங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளிலும் பிரதமர் மோடி பங்கேற்க உள்ளதாக தெரிகிறது. மறுநாள் (28ந் தேதி) தூத்துக்குடியில் புதுப்பிக்கப்பட்ட விமான நிலையத்தை பிரதமர் மோடி திறந்து வைக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

## பாகிஸ்தான்: பாதுகாப்புப்படையினர் நடத்திய என்கவுன்டரில் 9 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை



லாகூர், ஜூலை 20

பாகிஸ்தானில் பல்வேறு பயங்கரவாத அமைப்புகளும், கிளர்ச்சிக்குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த குழுக்களை ஒழிக்க பாதுகாப்புப்படையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் கைபர் பக்துவா மாகாணம் ஹங்கு மாவட்டம் சின்வாரி சர்ஹரி பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் இன்று அங்கு சென்ற பாதுகாப்புப்படையினர் தேடுதல் வேட்டை நடத்தினர்.

அப்போது அங்கு பதுங்கி இருந்த பயங்கரவாதிகள், பாதுகாப்புப்படையினர் மீது துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக பாதுகாப்புப்படையினரும் தாக்குதல் நடத்தினர். இரு தரப்பிற்கும் இடையே நடந்த மோதல் 9 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். பாதுகாப்புப்படையினர் 3 பேர் காயமடைந்தனர்.

## 'பிரிக்ஸ்' அமைப்பு விரைவில் மறைந்து போகும்: அமெரிக்க அதிபர் டிரம்ப்



வாஷிங்டன், ஜூலை 20

இந்தியா,ரஷியா,சீனா,பிரேசில், தென் ஆப்பிரிக்கா உள்பட 10 நாடுகளை உள்ள–டக்கிய பிரிக்ஸ் கூட்டமைப்பு மீது அமெரிக்கா அதிபர் டிரம்ப் பல்வேறு குற்றச்சாட்டுகளைகூறிவருகிறார். இந்த நிலையில் டிரம்ப் கூறியதாவது:

பிரிக்ஸ் அமைப்பு அமெரிக்க டாலரின் உலகளாவிய ஆதிக்கத்தை குறைத்து மதிப்பிட முயற்சி செய்கிறது. எங்களுடன் விளையாட யாரையும் நாங்கள் ஒரு போதும் அனுமதிக்க முடியாது. பிரிக்ஸ் அமைப்பிற்குஒருகடுமையானபொருளாதாரசவாலைஎதிர்க்கொள்ளும் ஒற்றுமைஇல்லை.பிரிக்ஸ்நாடுகளில்இருந்துஇறக்குமதிசெய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீதம் வரி விதிக்கப்படும். பிரிக்ஸ் அமைப்பு விரைவில் மங்கி மறைந்து போகும் என்றார்.

# மத்திய பாஜக அரசு மதவாதத்தை வளர்க்கிறது; முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் விமர்சனம்

சென்னைஜூலை 20

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர்வரும்21ம்தேதிதொடங்கி அடுத்த மாதம் 21ம் தேதி வரை ஒருமாதம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தொடரில் பல்வேறு மசோதாக்களை அறிமுகம் செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதனிடையே, நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் தொடர்பாக திமுக எம்.பி.க்களுடன் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று ஆலோசனை நடத்தினார். கூட்டத்தொடரில் எவ்வாறு செயல்படுவது என்பதுகுறித்துதிமுகஎம்.பி.க்களுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார். மேலும், தமிழகத்திற்கான திட்டங்கள், நிதி குறித்த கேள்விகள் எழுப்புவது குறித்து ஆலோசனை நடைபெற்றது.



இந்நிலையில், மத்திய பாஜக அரசு மதவாதத்தை வளர்க்கிறது என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், மத்திய பாஜக அரசின் 11 ஆண்டுகள் என்பது, மக்களின் உரிமைகளை நசுக்குவது, மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பது, எங்கும் எதிலும் இந்தி & சமஸ்கிருதத்தைத்திணிப்பது, மதவாதத்தை வளர்ப்பது, முக்கியமாக, தமிழ்நாட்டை வஞ்சிப்பது என #NationalDictatorshipArrangement (தேசிய சர்வாதிகார) ஆட்சியை நடத்தி வருவதற்குத் தடையாக மக்களாட்சியின் குரலாக ஒலிக்கும் நமது திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள், நடைபெறவுள்ள நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் இந்திய மக்களின் உள்ளுணர்வுகளையும் தமிழ்நாட்டின் ஒருமித்த குரலையும் எடுத்து வைத்து, நிதியுரிமை மொழியுரிமை கல்வியுரிமை கூட்டாட்சி உரிமை ஆகியவற்றைப் பாதுகாத்திட அறிவுறுத்தியுள்ளேன்!

இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

## தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்தை பட்டியல் வகுப்பிலிருந்து(SC) மாற்றி இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில்(OBC)சேர்க்க வலியுறுத்தி டெல்லியில் கவன ஈர்ப்பு உண்ணாவிரத ஆர்ப்பாட்டம்

தேவேந்திரகுல வேளாளர்கள் சமுதாயத்தை பட்டியல் வகுப்பிலிருந்து மாற்ற கோரி டெல்லியில் ஒற்றுமையாக திரண்ட சமூகம். தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்தை பட்டியல் வகுப்பிலிருந்து(SC) மாற்றி இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில்(OBC)சேர்க்க வலியுறுத்தி டெல்லியில் கவன ஈர்ப்பு உண்ணாவிரத ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



தமிழக சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் தமிழகம், மகாராஷ்டிரா, டெல்லி ஆகிய மாநிலங்களை சேர்ந்த தேவேந்திரகுல வேளாளர்கள் டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தரில் அடையாள கவன ஈர்ப்பு உண்ணாவிரத ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். குறிப்பாக, தேவேந்திர குல வேளாளர் சமுதாயத்தை பட்டியலில்(SC) இருந்து நீக்கி இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் (OBC) சேர்க்க வேண்டும் என வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இதில் தமிழ்நாடு, மகாராஷ்டிரா, டெல்லி உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து 1000க்கும் மேற்பட்ட தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவர்கள் கவன ஈர்ப்பு உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர். இந்த கவனயீர்ப்பு உண்ணாவிரத ஆர்ப்பாட்டத்தில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்த தேவேந்திர குல வேளாளர் சமூக தலைவர் மல்லர் சுவாமிநாதன் அவர்கள், சேரசோழ பாண்டியர்களின் வம்சா வழியினரான தேவேந்திர குல வேளாளர் சமூகத்தினரை எப்படி பட்டியல் வகுப்பில் சேர்க்கப்பட்டனர் ? என்ற கேள்வியோடு, பூர்வீக தமிழ்குடி வேளாண்குடி மக்களை சேர்த்தது தவறு எனவும் தங்களது சமுதாயத்தை இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் (OBC) சேர்க்க வேண்டும் என வலியுறுத்தினார்.மேலும் இதற்கான நடவடிக்கைகளை மத்திய மாநில அரசுகள் விரைந்து செயல்படுத்திட வேண்டும் எனவும், தமிழக சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் எங்களது கோரிக்கைகளை எந்த கட்சி நிறைவேற்றப்படும் என வாக்குறுதி யார் கொடுக்க முன் வருகிறார்களோ அவர்களுக்கு தங்கள் சமுதாய மக்கள் வரும் தேர்தலில் வாக்குகளை செலுத்துவார்கள் எனவும் தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வில் ஈரோடு திரு காமராஜ் அவர்கள் முன்னிலையில் டெல்லி மாநில தேவேந்திர குல வேளாளர் சங்க தலைவர் திரு A.V.மணி , பொறுப்பாளர் திரு . I.C.பாண்டி, திரு.காளிமுத்து , மகாராஷ்டிரா மாநில தேவேந்திர குல வேளாளர் சங்க தலைவர் திரு.K.K.பெருமாள் , தமிழக தேவேந்திர குல வேளாளர் சங்க பொறுப்பாளர்கள் திரு.ஆவடிK.ராஜேந்திரன், திரு. லயன் சிவகுமார், திரு.A.குமரராஜா, திரு .முத்து முனியாண்டி, தேவேந்திரகுல வேளாளர் சங்க பெண்கள் அணி பொறுப்பாளர்கள் திருமதி.நளினி சாந்தகுமாரி திருமதி. சுப்புலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர். பல மாவட்டங்களிலிருந்து கலந்து கொண்டு சிறப்பித்த சமூக மக்களுக்கும்,சமூக முன்னோடிகளுக்கும், நன்றியும் வாழ்த்துக்களும்.

## விழுப்புரத்தில் நடைபெற்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு / சாலை பாதுகாப்பு மற்றும் போதை ஒழிப்பு குறித்த கருத்தரங்கு

விழுப்புரத்தில் நடைபெற்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு / சாலை பாதுகாப்பு மற்றும் போதை ஒழிப்பு குறித்த கருத்தரங்கில் விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ப.சரவணன் IPS அவர்கள் ஒரு மனிதன் மிகப்பெரிய ஆற்றல் மிக்கவன் அவனது திறன் எரிமலைக்கு ஒப்பாகும் இப்படிப்பட்ட மனிதன் அறியாமையலாலும், விழிப்புணர்வு இண்மையாலும், போதைப் பொருள்பயன்படுத்திதனதுசக்தியை இழக்கின்றார் ஒரு நல்ல மனிதன் போதைக்கு அடிமை ஆகிறான் என்றால் அவனது கைகள் கட்டப்படுகின்றன அவனது சக்திகள் அடிமையாக்கப்படுகிறது. இப்படி இருக்கின்ற மனிதர்கள் அவர்கள் அருகில் இருப்பவர்கள் முதலில் போதை குறித்த விழிப்புணர்வினை அவருக்கு ஏற்படுத்தி அவரை



நல்வழிப்படுத்த வேண்டும்

இப்படிப்பட்ட செயல்களை பள்ளி, கல்லூரி படிக்கின்றார். மாணவர், மாணவிகள், முன்னெடுத்துச் சென்றால் தன் குடும்பத்தாரையும், தன் உற்றாரையும் தனது இந்த சமூகத்தை இந்த உலகத்தை நாம் நல்வழிப்படுத்த முடியும்என அறிவுரைவழங்கினார் உடன் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் A.V இளங்கோவன் S. தினகரன் டிஎஸ்பி உமாதேவி ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்

## விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே ஜம்போதி கிராம பொதுமக்கள் நடவடிக்கை எடுக்க கோரிக்கை

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே ஜம்போதி கிராம பொதுமக்கள் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட சர்வே எண் 64.1 பாதையாகவும் 66.6 ஏரி பாசன வாய்க்கால் ஆகவும் சொல்லக்கூடிய பாதைகள் புதர் மண்டி கிடப்பதால் அந்தப் பகுதியை சீர் செய்வதற்கு ஊராட்சி மன்ற தலைவர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை செய்வதற்கு தடையாக அந்தப் பகுதியை சேர்ந்த தனிநபர் நான் திமுக கட்சியை சேர்ந்தவன் எனக்கு அதிகாரிகள் சிபாரிசு செய்வார்கள் எங்களை யாரும் எதுவும் செய்ய முடியாதுஎன்று அங்குள்ள மரவாடிகள் பனை மரங்கள் உட்பட வெட்டி செங்கல் சூளைக்கு ஏற்றுவது வழக்கமாம் இதனை கிராமத்து சார்பாக மாவட்ட ஆட்சியருக்கு மனு கொடுத்த தாம் மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் வட்டாரவளர்ச்சி அலுவலர் பிரபாகரன் நேரில் ஆய்வு செய்து நாங்கள் தான் பணம் கொடுக்கிறோம் நாங்கள் சொல்ற இடத்தில் தான் நீங்கள் வேலை செய்யணும் நீங்கள் மீண்டும் இந்த இடம் வேலை செய்தால் நாங்கள் பணம் போட மாட்டோம் என்று உத்தரவிட்டார் இந்தப் பாதை சம்பந்தமாக 2017 18 கிராம சமூக ஆர்வலர்களுக்கும் தனிப்பட்ட நபருக்கும் செஞ்சி சார்பு நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது அந்த வழக்கு தள்ளுபடி செய்து கிராம சமூக ஆர்வலர்களுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது சந்தர்ப்பவாதிகளுக்கு அதிகாரிகள் சாதகமாக செயல்படுவதை கண்டித்து ஜம்போதி கிராம பொதுமக்கள் துறை ரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர்





# தமிழ்நாட்டை பாராட்டிய சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதி ஸ்ரீராம்

சென்னை, ஜூலை 20

ராஜஸ்தான் ஐகோர்ட்டிற்கு பணிமாற்றம் செய்யப்பட்டுள்ள சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராம்க்கு ஐகோர்ட்டின்சார்பில் வழியனுப்பு விழா நடத்தப்பட்டது.

விழாவில் தலைமை நீதிபதி ஸ்ரீராம் பேசியதாவது:

புகழ்மிக்க சென்னை ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக பதவி வகித்ததில் பெருமை அடைவதாகவும், சென்னை ஐகோர்ட்டில் ஒன்பது மாத பதவிக் காலத்தில் அதிகளவில் கற்றுக் கொண்டுள்ளதாகவும், முழு திருப்தியுடன் விடைபெறுவதாகவும் குறிப்பிட்டார்.

சென்னை ஐகோர்ட்டில் ஏராளமான பெண் வழக்கறிஞர்கள் ஆஜராகின்றனர். அதேபோல் ஏராளமான பெண்கள் வழக்கறிஞர்களாக பதிவு செய்கின்றனர். தமிழ்நாடு நீதித்துறையிலும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 2 1 3 நீதிபதிகளில் 130 நீதிபதிகள் பெண்கள். இதற்கு மாநிலத்தை பாராட்டுவதாகவும் கூறி, கற்க கசடற



கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக என்ற குறளையும் குறிப்பிட்டுப் பேசினார்.

தலைமைநீதிபதியின் பிரிவு உபச்சார விழாவில், பல்வேறு வழக்கறிஞர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் பங்கேற்றபோதும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தரப்பில் நிர்வாகிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

# கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு: பங்களாவை மீண்டும் ஆய்வு செய்ய கோரி மனு




நீலகிரி , ஜூலை 30

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அடுத்த கோடநாடு பகுதியில் முன்னாள் முதல்அமைச்சர் ஜெயலலிதா மற்றும் அவரது தோழி சசிகலாவுக்கு சொந்தமான தேயிலை எஸ்டேட் உள்ளது. இந்த எஸ்டேட்டில் கடந்த 2017ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் தேதி நடந்த கொலை, கொள்ளை தொடர்பாக சயான் உட்பட 10 பேரை போலீசார் கைது செய்தனர்.

இது தொடர்பான வழக்கு ஊட்டி ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் கடந்த 7 ஆண்டுகளாக நடந்து வருகிறது. இந்நிலையில், இவ்வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள கேரளாவை சேர்ந்த வாளையார் மனோஜ் கோர்ட்டில் ஆஜரானார்.

அரசு தரப்பில் வக்கீல்கள் ஷாஜகான் மற்றும் கனகராஜ் ஆகியோரும், சிபிசிஐடி ஏடிஎஸ்பி முருகவேல் தலைமையிலான சிபிசிஐடி போலீசாரும் ஆஜராகினர். கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் குற்றம் நடைபெற்ற எஸ்டேட் பங்களாவில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என கடந்த 2023ம் ஆண்டு குற்றவாளிகள் சார்பில் அளிக்கப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்நிலையில் மீண்டும் பங்களாவை ஆய்வு செய்ய வேண்டும் என வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 10வது குற்றவாளியான ஜித்தின் ஜாய் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதற்கு அரசு தரப்பு வக்கீல்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து வழக்கு விசாரணையை ஆகஸ்ட் மாதம் 14ம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதி முரளிதரன் உத்தரவிட்டார்.

# மதுரை ஆதீனத்திற்கு முன் ஜாமீன் என்னென்ன நிபந்தனைகள்?

சென்னை, ஜூலை 20

சைவ சிந்தாந்த மாநாட்டில் கலந்துக் கொள்வதற்காக மதுரை ஆதீனம் கடந்த மே 2ந்தேதி காரில் சென்றபோது, உளுந்தூர் பேட்டை அருகே மற்றொரு கார் லேசாக மோதிவிட்டு நிற்காமல் சென்றது. இந்த சம்பவம் குறித்து மாநாட்டில் பேசிய மதுரை ஆதீனம், 'என்னை கொலை செய்ய சதி நடந்துள்ளது. இதில் பாகிஸ்தானுக்கும் தொடர்பு இருக்கலாம். என் கார் மீது மோதிய காரில் வந்தவர்கள் குல்லா அணிந்து, தாடி வைத்திருந்தனர்' என்று கூறினார்.

இது சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. இவரது பேச்சு இரு மதத்தினருக்கு இடையே மோதலை உருவாக்கும் வகையில் இருப்பதாக கூறி சைபர் கிரைம் போலீசில் வக்கீல் ராஜேந்திரன் என்பவர் புகார் செய்தார். புகாரின் அடிப்படையில், மதுரை ஆதீனம் மீது 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் முன் ஜாமீன் கேட்டு சென்னை மாவட்ட முதன்மை செசன்சு கோர்ட்டில் மதுரை ஆதீனம் மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி கார்த்திகேயன் விசாரித்து வந்தார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, மனு மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்து உத்தரவிட்டார்.



இந்த நிலையில், மத மோதலை தூண்டும் வகையில் பேசிய வழக்கில் மதுரை ஆதீனத்திற்கு முன் ஜாமீன் வழங்கி சென்னை முதன்மை செசன்சு கோர்ட்டு உத்தரவிட்டது.

தனது கார் விபத்து சம்பவத்திற்கு மத ரீதியாக சாயம் பூசிய விவகாரத்தில் மதுரை ஆதீனத்திற்கு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் நிபந்தனை முன் ஜாமீன் வழங்கியுள்ளது

☐ ஆதீனம் 60 வயதுக்கு மேற்பட்டவர் என்பதால் அவர் வசிக்கும் இடத்திற்குச் சென்று போலீசார் விசாரிக்கலாம். விசாரணைக்கு அவர் ஒத்துழைக்க வேண்டும். வழக்கு விசாரணை முடியும் வரை சாட்சிகளை கலைக்கக் கூடாது, தலைமறைவாகக் கூடாது. மதுரை ஆதீனம் தலைமறைவானால் அவர் மீது வழக்குப் பதிவு செய்யலாம். ரூ.10,000 ரூபாய்க்கான இருநபர்ஜாமீனைமாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் மதுரை ஆதீனம் தாக்கல் செய்ய வேண்டும் என பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது.

# திருவள்ளூரில் 8 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை: காவல் நிலையத்தை முற்றுகையிட்ட உறவினர்கள்

திருவள்ளூர், ஜூலை 20

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தாலுகாவில்உள்ளஒருகிராமத்தை சேர்ந்த 10 வயது சிறுமி, தனது பாட்டி வீட்டில் தங்கி அப்பகுதியில் உள்ள பள்ளியில் 4ம் வகுப்பு படித்து வருகிறார். கடந்த 12ந்தேதி மதியம் பள்ளி முடிந்து சிறுமி வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது சிறுமி தனியாக செல்வதை நோட்டமிட்ட மர்ம ஆசாமி, பின்தொடர்ந்து சென்றார்.

பின்னர் ஆள்நடமாட்டம் இல்லாத நேரத்தில் திடீரென அந்த ஆசாமி, சிறுமியின் வாயை கைகளால் பொத்தி அருகே இருந்த மாந்தோப்புக்குள் தூக்கி சென்றார். பின்னர் அங்கு சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த அந்த நபர் அங்கிருந்து தப்பி சென்று விட்டார். பாதிக்கப்பட்ட சிறுமி அழுது கொண்டே தனக்கு நேர்ந்த கொடுமை குறித்து உறவினர்களிடம் தெரிவித்தார்.



இது குறித்து சிறுமியின் உறவினர்கள் ஆரம்பாக்கம் போலீசில் புகார் அளித்தனர். போலீசார் வழக்குப் பதிவு செய்து சம்பவம் நடந்த பகுதியில் இருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளைவைத்து,சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த நபரை தனிப்படை அமைத்து தேடி வருகின்றனர்.

இந்தநிலையில், 8வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் 8நாட்களாகியும் இதுவரைகுற்றாவாளியை கைது செய்யவில்லை எனக்கூறி பாதிக்கப்பட்ட சிறுமியின் உறவினர்கள் ஆரம்பாக்கம் காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர். அப்போது காவல்துறையினர் ஒவ்வொரு நாள் வரும்போதும் 2 நாட்கள் கால அவகாசம் கேட்பதாக குற்றம் சாட்டினர்.

செல்போன் தொலைந்தால் கூட உடனடியாக கைது செய்யும் காவல்துறையினர், சம்பவம் நடந்து 8 நாட்களாகியும் இதுவரை குற்றவாளியை கைது செய்யவில்லை எனவும் புகார் தெரிவித்தனர். மேலும் உடனடியாக அந்த நபரை கைது செய்ய வேண்டும் என்றும் கைது நடவடிக்கை காலதாமதமானால் போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# புதிய மேம்பாலம் கட்டும் பணிகள் கே.என். நேரு நேரில் ஆய்வு



சென்னை, ஜூலை 20

அமைச்சர் கே.என். நேரு ரூ.164.92 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மேம்பாலப் பணியினை இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

போக்குவரத்து நெரிசலை குறைக்கும் விதமாக பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு133 மற்றும் வார்டு 141 க்குட்பட்ட தெற்கு உஸ்மான் சாலை மற்றும் சி.ஐ.டி. நகர் பிரதான சாலையில் புதிய மேம்பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் கீழ் ரூ.164.92 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் இந்த மேம்பாலப் பணியினை இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டேன்.

அப்போது பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறின்றி மேம்பாலப் பணிகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு அரசு அலுவலர்களை அறிவுறுத்தினேன்.

இந்த ஆய்வின்போது, மேயர் ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த. வேலு, ஜெ.கருணாநிதி, மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மயிலாடுதுறை டி.எஸ்.பி. சுந்தரேசன் சஸ்பெண்டு?

மயிலாடுதுறை, ஜூலை 20

மயிலாடுதுறை மதுவிலக்கு பிரிவு டி.எஸ்.பி.யாக பணிபுரிந்து வருபவர் சுந்தரேசன். இவர் அலுவலகத்துக்கு நடந்து செல்வதாக சமூக வலைதளங்களில் வீடியோ வைரலானது. அவரது அலுவலக வாகனத்தை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு, வி.ஐ.பி. பாதுகாப்பு பணிக்கு மாற்றிவிட்டு பழுதடைந்த வாகனத்தை அவருக்கு கொடுத்ததாகவும் அந்த வாகனம் தனக்கு தேவையில்லை என்று ஒப்படைத்துவிட்டு பணிகளை கவனிக்க வீட்டில் இருந்து நடந்து வந்ததாகவும் வீடியோ வைரல் ஆனது.

இதற்கு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் இருந்து மறுப்பு தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து துணை போலீஸ் சூப்பிரண்டு சுந்தரேசன் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது: "லஞ்சம் வாங்காமல் நேர்மையாக பணிபுரிவதால் எனக்கு தண்டனை தருகிறார்கள். எனது அலுவலக வாகனத்தை எடுத்துக்கொண்டு மனரீதியாக என்னை சித்ரவதை செய்கிறார்கள்.

நான் லஞ்சம் வாங்கியதாக நிரூபிக்கப்பட்டால் அலுவலக வாசலிலேயே தூக்கில் தொங்க தயார். எனது உயிர் முக்கியம் இல்லை. லஞ்சம், ஊழல் இவற்றில் இருக்கும் அதிகாரிகளுக்கு வசூல் செய்யாத நேர்மையான போலீசார்



பழிவாங்கப்படுவார்கள். நான் தன்னிச்சையாக பேட்டியளிப்பதால் ஒழுங்கு நடவடிக்கை என்ற பெயரில் 'சஸ்பெண்டு' செய்யப்படுவேன் என்றும் தெரிந்து தான், இந்த பேட்டி அளிக்கிறேன்" என்று கூறினார்.

இந்த நிலையில், மயிலாடுதுறை மதுவிலக்கு பிரிவு டி.எஸ்.பி. சுந்தரேசனை பணியிடை நீக்கம் (சஸ்பெண்டு) செய்ய டிஐஜி ஜியாவுல் ஹக் திருச்சி மண்டல ஐஜிக்கு பரிந்துரை செய்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. தன்னுடைய வாகனத்தை எஸ்.பி. அலுவலகத்தினர் வாங்கிக் கொண்டதாக மதுவிலக்கு டிஎஸ்பி சுந்தரேசன் பேட்டி அளித்த நிலையில், தஞ்சை மண்டல டிஐஜி ஜியாவுல் ஹக் இன்று காலை மயிலாடுதுறை எஸ்.பி.அலுவலகத்தில் விசாரணை நடத்தினார்.

# சம்பளம் சாராத இதர பணப் பட்டியல்களை அடுத்த மாதம் முதல் கம்ப்யூட்டர் வழியாக அனுப்ப அரசு உத்தரவு

சென்னை, ஜூலை 20

கருவூலம் மற்றும் கணக்குத்துறை இயக்குனர் சாருஸ்ரீ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான சம்பளப் பட்டியல்களை கணினி மற்றும் இணையதளம் மூலமாக அனுப்பும் பணி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், சம்பளம் சாராத இதர பணப் பட்டியல்களையும் அதே வழியில் அனுப்ப அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி, ரூ.20 ஆயிரம் வரையிலான சம்பளம் சாராத பட்டியல்களை கணினி மூலமாக அனுப்பும் நடைமுறையை ஆகஸ்டு மாதம் முதல் நடைமுறைக்கு வர உள்ளது. மின்சாரம், தொலைபேசி கட்டணம், முன்பணம் சார்ந்த பணப் பட்டியல்கள், பயணப்படி ஆகியவற்றை இனி



இணையதளத்தை பயன்படுத்தி அனுப்ப வேண்டும்.

மேலும் ரூ.20 ஆயிரத்துக்கு அதிகமான பணப் பட்டியல்களை அக்டோபர் மாதத்தில் இருந்து கணினிமூலமாகஅனுப்ப வேண்டும். ரசீதுகளையும் அதனுடன் இணைக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பர்வதமலைக்கு சென்றபோது சோகம்... கல்லூரி மாணவர் மூச்சுத்திணறி உயிரிழப்பு

திருவண்ணாமலை ஜூலை 20

திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் அருகே தென்மாதிமங்கலம் பகுதியில்சுமார்4,560 அடி உயரம் கொண்ட பர்வதமலை மீது மல்லிகார் ஜூனேஸ்வர சுவாமி கோவில் அமைந்துள்ளது. இங்கு ஒவ்வொரு மாத பவுர்ணமி நாட்களிலும் மற்றும் வார விடுமுறை நாட்களிலும் உள்ளூர் மட்டுமின்றி, வெளிமாவட்டம், வெளிமாநிலங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில் பெங்களூரு பெல்லாரி தேவி நகரைச் சேர்ந்தவர் மனோஜ் குமார் (21 வயது).

இவர் பெங்களூருவில் உள்ள பொறியியல் கல்லூரியில் 2ம் ஆண்டு படித்து வந்தார். இவர் தனது நண்பர்களுடன் நேற்று முன்தினம் பர்வதமலைக்கு வந்து மலை மீது ஏறி சென்று சாமி தரிசனம் செய்தார். பின்னர் மலையில் இருந்து கீழே இறங்கி வரும் வழியில் திடீரென மனோஜ்குமாருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு மயங்கினார்.

உடனடியாக அவரை உள்ளூரை சேர்ந்தவர்கள் டோலி கட்டி கீழே கொண்டு வந்தனர். பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் கலசபாக்கம் அரசு துணை மருத்துவமனைக்கு அவரை கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

பின்னர் அவரது உடலை பிரேத பரிசோதனைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கடலாடி போலீசார் அனுப்பி வைத்தனர். தொடர்ந்து இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருத்துறைப்பூண்டியில் நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம்

திருத்துறைப்பூண்டி . திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பாக பொது விநியோக திட்டம் கண்காணிப்புக்குழு மாதந்திர கூட்டம் திருத்துறைப்பூண்டி வட்ட வழங்கல் அலுவலகத்தில் 18.07.2025அன்று மாலை வட்ட வழங்கல்அலுவலர் ரம்ஜான் பேகம் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. கூட்டுறவுத்துறை பதிவாளர் வேணி முன்னிலை வகித்தார். நுகர்வோர் பாதுகாப்பு சங்கத் தலைவர் வக்கீல் நாகராஜன் அனைவரையும் வரவேற்றார். இந்த கூட்டத்தில் தலைமை வருவாய் உதவியாளர் ஷேக்தாவூத், வட்ட வழங்கல்துறை இளநிலை உதவியாளர் கார்த்திக் ரகுநாத், ஊராட்சி ஒன்றிய அலுவலக இளநிலை உதவியாளர்கள் மற்றும் வட்டாச்சியர் அலுவலக இளநிலை உதவியாளர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டனர். மேலும் கண்காணிப்பு குழுவை சேர்ந்த பல பேர் கலந்துக் கொண்டு நுகர்வோர் குறைகளை எடுத்துரைத்தனர். முதலாவதாக புதிதாக பொறுப்பேற்று மிகச்சிறப்பாக செயல்பட்டு கொண்டுள்ள வட்ட வழங்கல் அலுவலர் ரம்ஜான் பேகத்திற்கு கண்காணிப்பு குழு சார்பாக வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது. கீழ்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என நுகர்வோர் பாதுகாப்பு சங்கம் சார்பாகவும், கண்காணிப்பு குழு சார்பாகவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.




1. வட்டார வளர்ச்சி அலுவலகம் வீடு கட்டும் திட்டம் மூலம் வழங்கப்படும் நிதியை உடனே வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.
2. நியாய விலைக்கடையில் பொருட்கள் பயோமெட்ரிக் முறை இரண்டு முறை பயன்படுத்த வேண்டியுள்ளதாகவும் ஒரு முறை பயோமெட்ரிக் முறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.
3. நியாய விலைக்கடையில் எடை இயந்திரத்தில் "0" அளவு அமைத்து எடை போட அங்காடி விற்பனையாளருக்கு தெரிவிக்கவேண்டும் என தெரிவித்தனர்.
4. சங்கிலி வீரன் கோவில் மற்றும் ரொக்கக் குத்தகை மக்கள் பெரிய சிங்களாந்தி கடை எண் 18GP002p1 என்றகடைக்கு பொருட்கள் வாங்க தூரம் மிக அதிகமாக உள்ளதாக தெரிவித்துள்ளனர்
5. நியாய விலை கடையின் இருப்பு விபரம் மற்றும் விற்பனையாளர் தொலைபேசி எண் கொண்ட அறிவிப்பு பலகை வைக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.
6. கொத்தமங்கலம் நியாய விலைக்கடையினை அரசு கட்டிடத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என தெரிவித்தனர்,
7. கடந்த கண்காணிப்பு குழு கூட்டத்தில் ராஜ கொத்தமங்கலம் அங்காடிக்கு தனி விற்பனையாளர் பணியமர்த்த கோரிக்கை வைக்கப்பட்டது அதன் அடிப்படையில் தனி விற்பனையாளர் நியமிக்கப்பட்டுள்ளது.
8. நியாயவிலை கடைகளில் புகார் தெரிவிக்கும் எண் எழுதப்பட வேண்டும் என தெரிவித்தனர்.
9. நியாயவிலை கடை விற்பனையாளர்கள் கிராம மக்களை சேர்த்து வாட்ஸ் ஆப் குரூப் தொடங்க அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது
10. நியாயவிலை கடை விற்பனையாளர்கள் பணி நேரம் முழுமையாக பணியாற்ற வேண்டும் என தெரிவிக்கப்பட்டது
11. கடந்த 09.05.2025 அன்று நடைபெற்ற ஜாமபந்தியில் கொத்தமங்கலம் கிராமத்தைசேர்ந்ததிருவி.ஆர். வெங்கடேஷ் பட்டா மாற்றம் தொடர்பாக மனு அளித்துள்ளார், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.
12. நீக்கல் சான்று கோரி மனு அளிக்கப்பட்டது உடனடியாக நீக்கல் சான்று வழங்கப்பட்டது
13. அதியவாசிய பொருட்கள் கிடங்குகளிலிருந்து லாரியில் ஏற்றும்போது எடை சரிபார்க்கப்படவேண்டும் என தெரிவித்துள்ளனர்.
14. அண்ணாநகர் நியாயவிலைக்கடை விற்பனையாளர் சரியாக கடையை திறப்பதில்லை என தெரிவித்துள்ளனர்
15. மாற்றுதிறானாளிகளுக்கு அத்தியவாசிய பொருட்கள் வீடுகளுக்கு சென்று வழங்க நடவடிக்கை எடுக்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது
16. நகல் குடும்ப அட்டைகள் இணையதளத்தில் விண்ணப்பம் செய்து விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தனர்.
17. சிலிண்டர் மானியம் தொகை அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தனர்
18. மேட்டுப்பாளையம் , பாமனி, நூனாக்காடு ஆகிய நியாயவிலைகடை விற்பனையாளர்கள் தனி வாட்ஸ் ஆப் குரூப் அமைத்து தகவல்கள் தெரிவித்துவருவதாக தெரிவித்தனர். மிகச்சிறப்பாக செயல்படுகிற பாமணி விற்பனையாளர்செந்தில் அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.
19. சமூக சேவகர்களை கண்காணிப்பு குழு உறுப்பினராக்க கோரிக்கை வைக்கப்பட்டது.

இறுதியில்பேசிய கூட்டுறவு பதிவாளர் வேணி மற்றும் வட்ட வழங்கல் அலுவலர் பெரும்பாலான கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்க உறுதி அளித்தனர். இறுதியில் நுகர்வோர் பாதுகாப்பு சங்க துணைத் தலைவர் முனைவர் துரை ராயப்பன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# மதுரை: பெண்ணிடம் 2 பவுன் நகை பறிப்பு

மதுரை, ஜூலை 20

மதுரை மாவட்டம் கள்ளிக்குடி தாலுகா தென்னமநல்லூரை சேர்ந்தவர் இருளாயம்மாள் (வயது 27). இவர் கள்ளிக்குடியில் உள்ள பலசரக்கு கடையில் வேலை பார்த்து வருகிறார். சம்பவத்தன்று வேலை முடித்துவிட்டு தனது வீட்டுக்கு வருவதற்காக, இருசக்கர வாகனம் ஒன்றில் கள்ளிக்குடி தென்னமநல்லூர் சாலையில் முனியாண்டிபுரம் அருகே வந்தார்.

அப்போது, பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர் ஒருவர் இருளாயம்மாள் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் மோதி அவரை கீழே தள்ளினார். பின்னர் அவர் கழுத்தில் இருந்த 2 பவுன் நகையைபறித்துகொண்டு தப்பி ஓடி விட்டார். இது குறித்து இருளாயம்மாள் வில்லூர் போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்துநகையை பறித்து சென்ற மர்ம ஆசாமியை தேடி வருகின்றனர்.

# கஞ்சா வழக்கில் 3 பேர் குண்டர் சட்டத்தில் கைது

தூத்துக்குடி ஜூலை 20

தூத்துக்குடி வடபாகம் காவல் நிலைய எல்லைக் குட்பட்ட பகுதியில் கடந்த 18.6.2025 அன்று கஞ்சா விற்பனை செய்த வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளான தூத்துக்குடி, நடராஜபுரம் பகுதியைச் சேர்ந்த கருப்பசாமி மகன் முருகன்(எ) டீயோ முருகன் (வயது 27), ரஹமதுல்லாபுரம் பகுதியைச் சேர்ந்த ராமநாதன் மகன் கோவிந்தராஜன் (எ) கோபி(23) மற்றும் பூபாண்டிபுரம் பகுதியைச் சேர்ந்த ராஜா மகன் சடமாரியப்பன்(23) ஆகியோரை மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் இளம்பகவத் உத்தரவின்பேரில் இன்று (18.7.2025) வடபாகம் காவல் நிலைய போலீசார் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த ஆண்டு இதுவரை 76 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது.

# தூத்துக்குடி: போக்சோ வழக்கு குற்றவாளிக்கு 3 ஆண்டுகள் சிறை, ரூ.12 ஆயிரம் அபராதம்




தூத்துக்குடி ஜூலை 20

தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2020ம் ஆண்டு 6 சிறுமிகளிடம் பாலியல் செய்கை செய்த வழக்கில் கழுகுமலை பகுதியைச் சேர்ந்த முத்தையா மகன் ஏசுராஜ் (வயது 54) என்பவரை கழுகுமலை காவல் நிலைய போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

இந்த வழக்கின் விசாரணை தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி பிரீத்தா நேற்று குற்றவாளியான ஏசுராஜ் என்பவருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.12,000 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கை சிறப்பாக புலனாய்வு செய்த அப்போதைய கழுகுமலை காவல் நிலைய இன்ஸ்பெக்டர் கஸ்தூரி, குற்றவாளிக்கு தண்டனைபெற்றுத்தர நீதிமன்றத்தில்திறம்பட வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் முத்துலட்சுமி, விசாரணைக்கு உதவியாக இருந்த ஏட்டு சேதுராஜன் ஆகியோரை மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பாராட்டினார்.

# உலக பாரம்பரிய சின்னமாக செஞ்சிக்கோட்டை அறிவிப்பு: அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு



விழுப்புரம், ஜூலை 20

கட்டிடக்கலையில் சிறந்து விளங்கும் செஞ்சிக்கோட்டையை பார்த்து ரசிக்க தினந்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இந்த நிலையில் செஞ்சிக்கோட்டை கடந்த 11ந் தேதி உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக செஞ்சிக்கோட்டைக்கு சுற்றுலா பயணிகளின் வரத்து மேலும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு சுற்றுலா பயணிகளுக்கு குடிநீர், கழிப்பறை, மின்விளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பது தொடர்பாக தமிழக முதன்மைச் செயலாளரும், மாவட்ட கண்காணிப்பு அலுவலருமான சுன்சோங்கம் ஜடக்சிரு நேற்று செஞ்சிக்கோட்டையில் கலெக்டர் ஷேக் அப்துல் ரஹ்மான் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து தாசில்தார் அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த தாசில்தார் அலுவலகம் கட்ட உள்ள இடத்தை பார்வையிட்டார். பின்னர் செஞ்சி அரசு மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்ட கண்காணிப்பு அதிகாரி, அங்கு சிகிச்சைக்கு வந்திருந்த நோயாளிகளிடம் குறைகளை கேட்டறிந்தார்.

இதையடுத்து மேல்மலையனூர் அருகே சிறுவாடி அலம்பூண்டி இடையே ரூ.5 கோடியே 73 லட்சம் மதிப்பில் மேம்பாலம் கட்டும் பணியை பார்வையிட்டதோடு பணியை விரைந்து தரமாக முடிக்க வேண்டும் என அங்கிருந்த அலுவலர்களிடம் அவர் வலியுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., கூடுதல் கலெக்டர் பத்மஜா, பயிற்சி கலெக்டர் வெங்கடேஷ்வரன், ஒன்றியக்குழு தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் கண்ணன், பேரூராட்சிகள் துறை உதவி செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன், மண்டல போக்குவரத்து அலுவலர் பட்டாபி, தாசில்தார் துரைச்செல்வன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபா சங்கர், தொல்லியல் ஆர்வலர் ஆசிரியர் முனுசாமி உள்பட பலர் உடன் இருந்தனர்.

# தூத்துக்குடி: சிறப்பாக பணியாற்றிய 7 இன்ஸ்பெக்டர்களுக்கு நினைவுப்பரிசு எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் வழங்கினார்




தூத்துக்குடி ஜூலை 20

தூத்துக்குடி மாவட்டத்திற்குள் உள்ள காவல் நிலையங்களில் வழக்குப்பதிவு, வழக்கின் விசாரணை, நீதிமன்ற பணி உட்பட அனைத்து பணிகளிலும் சிறப்பாக நடவடிக்கை மேற்கொண்டமைக்காக தூத்துக்குடி வடபாகம், ஆறுமுகநேரி மற்றும் கோவில்பட்டி மேற்கு ஆகிய 3 காவல் நிலையங்களை மாவட்ட எஸ்.பி. சிறந்த பணிகளின் அடிப்படையில் தேர்வு செய்தார்.

அதேபோன்று காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட மனுக்களின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து சிறப்பாக செயல்பட்டதற்காக சிப்காட், தூத்துக்குடி தென்பாகம் மற்றும் ஆறுமுகநேரி ஆகிய காவல் நிலையங்களும், அதிகமான வழக்குகளை Efiling முறையில் நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்க விரைந்து நடவடிக்கை மேற்கொண்டமைக்காக தூத்துக்குடி தென்பாகம், ஸ்ரீவைகுண்டம் மற்றும் ஏரல் ஆகிய காவல் நிலையங்களும் தூத்துக்குடி மாவட்டத்திற்குள் தேர்வு செய்யப்பட்டன. மேற்சொன்ன மொத்தம் 7 காவல் நிலையங்களின் சிறப்பான நடவடிக்கைக்காக அதன் காவல் நிலைய இன்ஸ்பெக்டர்களுக்கு மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் மாவட்ட காவல் அலுவலகத்தில் வைத்து நினைவு பரிசு வழங்கி பாராட்டினார்.

# கரடி விரட்டியதில் மின் கம்பத்தில் ஏறிய சிறுத்தை மின்சாரம் தாக்கி பலி



நீலகிரி, ஜூலை 20

நீலகிரி மாவட்டம் குன்னூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் பெரும்பாலும் அடர் வனப்பகுதி மற்றும் தேயிலை தோட்டங்களாக உள்ளது இதனால் வனவிலங்குகள் நடமாட்டம் அதிகமாக காணப்படுகிறது உணவு குடிநீர் தேடி குடியிருப்பு பகுதிகளுக்குள் நடமாடும் வனவிலங்குகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் மிகுந்த அச்சம் அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் குன்னூர் பாரஸ்டேல் ஸ்பிரிங்பீல்டு பகுதியில் சுமார் 2 வயதுடைய பெண் சிறுத்தைக் குட்டி கரடி விரட்டியதில் சிறுத்தை மின்கம்பத்தில் ஏரியதால் மின்சாரம் தாக்கி பரிதாபமாக உயிரிழந்தது.

இது குறித்து குன்னூர் வனத்துறை விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு பிறகு சிறுத்தையின் உடலை முறைபடி தீமூட்டி எரித்தனர்.

# சீட் பெல்ட் அணிந்து நான்கு சக்கர வாகனத்தை இயக்க போலீசாருக்கு தூத்துக்குடி எஸ்.பி. உத்தரவு





தூத்துக்குடி ஜூலை 20

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் நேற்று (18.7.2025) மாவட்ட காவல்துறை அலுவலக மைதானத்தில் வைத்து காவல்துறை வாகனங்களை ஆய்வு செய்து, வாகன ஓட்டுனர்களிடம் வாகனங்களில் ஏற்பட்ட குறைபாடுகளை கேட்டறிந்து சீர் செய்யுமாறும், சீட் பெல்ட் அணிந்து நான்கு சக்கர வாகனத்தையும்,ஹெல்மெட்அணிந்து இருசக்கர வாகனத்தையும் இயக்குமாறு உத்தரவிட்டும், வாகனங்களை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கினார்.

அதனை தொடர்ந்து மாவட்ட காவல்துறை அலுவலக கூட்ட அரங்கில் வைத்து மாதாந்திர ஆய்வுக்கூட்டம் மாவட்ட எஸ்.பி. தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள அனைத்து வழக்குகளின் புலன் விசாரணை, நிலுவையில் உள்ள வழக்குகள், கஞ்சா மற்றும் புகையிலை போன்ற போதைப்பொருட்கள் கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைமற்றும்அவர்களின்சொத்துக்கள், வங்கி கணக்குகள் முடக்கம் செய்தல், பொது அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்கள், கண்காணிக்கப்படும் ரவுடிகள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், நீதிமன்ற அலுவல்கள் மற்றும் பல்வேறு நிகழ்வுகள் குறித்து ஆய்வு நடைபெற்றது. இந்த கூட்டத்தில் காவல்துறை உயர் அகாரிகள் உட்பட காவல்துறையினர் பலர் கலந்துகொண்டனர்.

# கடலூர் மலையடி குப்பம் விவசாயிகளை அப்புறப்படுத்த இடைக்கால தடை: சென்னை ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, ஜூலை 20

கடலூர் மாவட்டம் மலையடிகுப்பம்,கொடுக்கன்பாளையம்கிராமத்தில் உள்ள விவசாய நிலங்களில் இருந்து விவசாயிகளை காலி செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தொடர்பாக, ஆக்கிரமிப்பு எனக்கூறி காவல்துறை மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் விவசாய நிலங்களில் இருந்து விவசாயிகளை வெளியேறுமாறு அறிவுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், காலி செய்யும் நடவடிக்கையை எதிர்த்து விவசாயிகள் சார்பில் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. மேலும் இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என வழக்கறிஞர் திருமூர்த்தி முறையீடு செய்தார். இதனை நீதிபதிகள் சுந்தர் மற்றும் ஹேமசந்திர கவுடா கொண்ட அமர்வு இன்று பிற்பகலில் விசாரணைக்கு எடுத்தனர்.

அப்போது அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் ஆஜராகி, அரசின் பொது திட்டத்திற்காக இந்த நிலங்களை கையகப்படுத்தப்படுவதாகவும், இந்த பகுதியில் உள்ள விவசாயிகள் அனைவரும் வசதி உள்ள விவசாயிகள்தான் என்றும் அவர் தெரிவித்தார். இதற்கு மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஆர்.திருமூர்த்தி, இதுதொடர்பாக விவசாயிகள் சார்பில் பேரிடர் மேலாண்மை முதன்மைச் செயலாளரிடம் மறு ஆய்வுகோரி கோரிக்கை மனு கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தடை விதிக்குமாறு கேட்டுள்ளோம் என்றும் வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களை கேட்ட நீதிபதிகள் பேரிடர் மேலாண்மை துறை முதன்மைச் செயலாளர் முடிவெடுக்கும் வரை விவசாயிகளை அந்த பகுதியில் இருந்து வெளியேற்றக்கூடாது என இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டனர். மேலும் விவசாயிகளுக்கு எதிராக முடிவு எடுக்கப்பட்டால், அதற்கு மேல்முறையீடு செய்வதில் 10 நாட்கள் கால அவகாசம் வழங்கியும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# நீலகிரி: வாழைக்கன்றுகளை சேதப்படுத்தி காட்டுயானைகள் அட்டகாசம்: விவசாயிகள் கவலை



நீலகிரி, ஜூலை 20

நீலகிரி மாவட்டம் கூடலூர் வன கோட்டத்தில் காட்டு யானைகள், புலிகள், சிறுத்தைகள் உள்ளிட்ட வனவிலங்குகளால் பொதுமக்கள், விவசாயிகள் பாதிப்புக்கு ஆளாகி வருகின்றனர். முதுமலை புலிகள் காப்பக எல்லையோர கிராமங்களான கூடலூர் தொரப்பள்ளி, புத்தூர் வயல், தேன் வயல், ஏச்சம் வயல், மாக்க மூலா, தேவர் சோலை பேரூராட்சி பகுதிகளில் காட்டு யானைகள் கடந்த 2 மாதங்களாக தொடர் அட்டகாசத்தில் ஈடுபட்டு வருகின்றன.

அவற்றை வனத்துறையினர் விரட்டும் பணியில் ஈடுபட்டாலும், வனப்பகுதிக்குள் செல்ல மறுத்து ஊருக்குள் தொடர்ந்து முகாமிட்டு வருகிறது. இதனால் அனைத்து தரப்பினரும் நிம்மதி இழந்துள்ளனர். முதுமலை எல்லையோர கிராமங்களில் இரவு நுழையும் காட்டு யானைகள் வாழைகள், பாக்கு, தென்னை மரங்கள், விவசாய பயிர்களை தினமும் தின்றுசேதப்படுத்துகிறது.

புத்தூர் வயலை சேர்ந்த சங்கரன்என்பவரது விளை நிலத்துக்குள் புகுந்த காட்டு யானைகள் வாழைக்கன்றுகளை மிதித்து துவம்சம் செய்தது. அதே பகுதியில் உள்ள விவசாயிகளின் வாழைகள் தொடர் தாக்குதலுக்கு ஆளாகி வருகிறது. இதே போல் தேவர்சோலை, பாடந்தொரை சுற்றுவட்டார பகுதிகளில் காட்டு யானைகள் முகாமிட்டு வருகின்றன.


பாடந்தொரை அருகே கணியம் வயல் பகுதியை சேர்ந்த அசைனார் என்பவர் வீட்டில் கால்நடைகள் வளர்த்து வருகிறார். நேற்று மேய்ச்சலுக்கு சென்ற பசு மாட்டை காணாமல், பல இடங்களில் தேடினார். அப்போது அதே பகுதியில் உள்ள தேயிலை தோட்டத்தில் புலி கடித்து தின்ற பசு மாட்டின் உடற்பாகங்கள் கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தநிலையில் இன்று அசைனாரின் எருமை மாட்டை புலி கடித்தது. மாட்டின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வந்தனர். அப்போது உடல் முழுவதும் புலியின் பற்கள் மற்றும் நகங்கள் பதிவான காயங்கள் தென்பட்டது. இதைத்தொடர்ந்து மாட்டுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால், சிறிது நேரத்திலேயே மாடு உயிரிழந்தது. இதுதொடர்பாக வனத்துறையினர் நேரில் பார்வையிட்டு விசாரணை நடத்தினர். அப்போது கால்நடைகளை கடித்து கொன்று வரும் புலியை கூண்டு வைத்து பிடிக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து பொதுமக்கள், விவசாயிகள் கூறும்போது, வனவிலங்குகள் தாக்கி விவசாய பயிர்கள் சேதம் மற்றும் கால்நடைகள் உயிரிழப்பு போன்ற காரணங்களுக்கு சேதத்துக்கு ஏற்ப வனத்துறையினர் இழப்பீடு தொகை வழங்குவதில்லை. காட்டு யானைகள் விவசாய பயிர்களையும், புலிகள் கால்நடைகளையும் தாக்கும் பிரச்சினைக்கு எப்போது தீர்வு கிடைக்கும். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# வரதட்சணை கொடுமை புகார்: காவலர் பூபாலன் பணியிடை நீக்கம்





மதுரை, ஜூலை 20

தேனி மாவட்டம், பெரியகுளத்தைச் சேர்ந்தவர் சிவா. இவரது மகள் தங்கப்பிரியா (32). பி.எஸ்.சி., பி.எட். பட்டதாரி. இவருக்கும், மதுரைகாதக்கிணறு செந்தில்குமரன் மகன் பூபாலனுக்கும் கடந்த 2018ம் ஆண்டு திருமணம் நடந்தது. பூபாலன் மதுரை அப்பன் திருப்பதி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிகிறார்.

தங்கப்பிரியா தனியார் பள்ளியில் ஆசிரியையாக உள்ளார். இவர்களுக்கு 7 வயதிலும், 5 வயதிலும் இரு மகன்கள் உள்ளனர். இத்தம்பதியரின் குழந்தைகளுக்கு காதணி விழாவின்போது, இருவருக்கும் தலா 5 பவுன் நகைகள் போடுமாறு தங்கப்பிரியாவின் பெற்றோரிடம் பூபாலன் மற்றும் அவரது குடும்பத்தினர் வலியுறுத்தியதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக கணவன், மனைவிக்குள் அடிக்கடி குடும்ப பிரச்சினை ஏற்பட்டது.

இந்த நிலையில், கடந்த இரு தினங்களுக்கு முன்பு பூபாலனுக்கும் அவரது மனைவிக்கும் இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது ஆத்திரத்தில் பூபாலன் மனைவியை தாக்கியுள்ளார். இதில் பாதிக்கப்பட்ட தங்கப்பிரியா தற்போது மதுரை அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும், தனது மனைவியை கொடுமைப்படுத்தியது குறித்து பூபாலன் தொலைபேசியில் அவரது தங்கையிடம்பேசிபகிர்ந்த ஆடியோ வெளியாகி சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. இதற்கிடையில் தங்கப்பிரியாவின் பெற்றோர் அப்பன் திருப்பதி காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதில், "தனது மகளை வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாகவும், பூபாலன் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இப்புகாரின் அடிப்படையில் கணவர் பூபாலன், விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் ஆய்வாளராக பணியாற்றும் அவரது பூபாலனின் தந்தை செந்தில்குமரன், தாய் விஜயா, தங்கை அனிதா ஆகியோர் மீது 5 பிரிவுகளில் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இதனையடுத்து கணவர் பூபாலன் மற்றும் அவரது பெற்றோர்கள் தலைமறைவாகினர். தொடர்ந்து ஊமச்சிகுளம் டி.எஸ்.பி. பாலசுந்தரம் தலைமையில்தனிப்படை அமைக்கப்பட்டு அவர்களை தேடி வருகின்றனர்.

இந்த நிலையில், வரதட்சணை கொடுமை வழக்கில் தலைமறைவாக உள்ள காவலர் பூபாலனை பணியிடை நீக்கம் செய்து மதுரை சரக டிஐஜி அபினவ் குமார் உத்தரவிட்டுள்ளார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
20.7.2025

# பல்நோக்கு மருத்துவப் பிரிவு மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்: அமைச்சர் கீதாஜீவன்




தூத்துக்குடி ஜூலை 20

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னையில் இருந்து தூத்துக்குடி மாநகராட்சி பி&டி காலனி மடத்தூர் நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று பல்நோக்கு மருத்துவப் பிரிவினைதுவக்கி வைத்ததைத் தொடர்ந்து, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் மற்றும் மாவட்ட கலெக்டர் இளம்பகவத் தலைமையில் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து சிகிச்சை முறையினை பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் கீதா ஜீவன் பேசியதாவது:

தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னெடுப்பின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் மக்கள் பயனடையும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் திறந்துவைக்கப்பட்டுள்ள பல்நோக்கு மருத்துவப் பிரிவு மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

பொதுநல மருத்துவம், மகப்பேறு மருத்தும், குழந்தைகள் நலன், கண், பல், மனநல மருத்துவம், தோல் மருத்துவம் உள்ளிட்ட அனைத்து மருத்துவசேவைகளும், ஆரம்ப சுகாதார நிலையத்தில் கிடைக்கிறது என்றால், மக்களுக்கு தேவையான சிகிச்சைகளை வசிக்கின்ற இடத்திலேயே கொண்டு சேர்க்கக்கூடிய வகையில் பணியினை செய்து வருகிறார்கள். ஆகவே தமிழ்நாடு முதல்அமைச்சரின் எண்ணம் வெற்றிகரமாக இருக்கும். மேலும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருக்கு பொதுமக்களின் சார்பாக நன்றியை கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட சுகாதார அலுவலர் யாழினி, தூத்துக்குடி வட்டாட்சியர் முரளிதரன், கவுன்சிலர்கள் இசக்கியப்பன், கண்ணன், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு துறையைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வீட்டில் தனியாக இருந்த மூதாட்டியிடம் நகை பறித்த வாலிபர் கைது

திருப்பூர், ஜூலை 20

திருப்பூர்பலவஞ்சிபாளையத்தை சேர்ந்தவர் ராமாத்தாள் (வயது 65). இவர் வீட்டில் தனியாக இருப்பதை நோட்டமிட்ட வாலிபர் ஒருவர் திடீரென வீட்டுக்குள் புகுந்தார். மேலும் அவரின் கழுத்தில் அணிந்திருந்த 3 பவுன் சங்கிலியை பறித்துக் கொண்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளார். இதுகுறித்து வீரபாண்டி போலீசில் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது.

அதன்பேரில் போலீசார் அப்பகுதியில் பொருத்தப்பட்டு இருந்த கண்காணிப்பு கேமராவை ஆய்வு செய்தனர். இதில் அதே பகுதியில் வசித்து வரும் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த பாலமுருகன் (30) என்பவரை பிடித்து விசாரணை நடத்தினர். அதில் மூதாட்டியின் நகையை பாலமுருகன் பறித்தது தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து போலீசார் பாலமுருகனை கைது செய்தனர்.

# பிளஸ்2 மாணவியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட வாலிபர் கைது

திருவள்ளூர், ஜூலை 20

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி பகுதியை சேர்ந்த 16 வயது சிறுமி பிளஸ்2 படித்து வருகிறார். மேல்திருத்தணி அமிர்தாபுரம் பகுதியைச் சேர்ந்த பிரவீன் (21) மாணவியை காதலிப்பதாக ஆசை வார்த்தைகள் கூறி, கடந்த மாதம் வெளியூருக்கு அழைத்து சென்று பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாககூறப்படுகிறது. மாணவி மாயமானது குறித்து பெற்றோர் திருத்தணி போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் இன்ஸ்பெக்டர் மதியரசன் போக்சோ வழக்குப்பதிவு செய்து, தலைமறைவாக இருந்த பிரவீனை நேற்று கைது செய்து சிறையில் அடைத்தனர். பள்ளி மாணவி பத்திரமாக மீட்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# இன்றைய ராசி பலன்கள் (20.7.2025)

**மேஷம்:** எதிர்பாராத நன்மை. குடும்ப சந்தோஷம் உயரும். பரிகாரம்: சனிபகவானை வழிபடுங்கள்.

**துலாம்:** உறவுகளில் நெருக்கம் பிறக்கும். எதிர்பார்த்த காரியம் கைகூடும். பரிகாரம்: கண்ணகி அம்மன் வழிபாடு.

**ரிஷபம்:** பண வருகை தாமதம். கவனமாக இருக்க வேண்டிய நாள். பரிகாரம்: விநாயகரை பூஜிக்கவும்.

**விருச்சிகம்:** வாகனங்களால் அனுகூலம். சுறுசுறுப்பான நாள். பரிகாரம்: அனுமன் சாமியை வணங்குங்கள்.

**மிதுனம்:** பயணத் திட்டம் அமையும். உறவினர் சந்திப்பு. பரிகாரம்: துர்கை அம்மனை சாமி தரிசனம்.

**தனுசு:** பிள்ளைகள் மூலம் மகிழ்ச்சி. கல்வி முயற்சிகளில் வெற்றி. பரிகாரம்: தட்சிணாமூர்த்தி பூஜை.

**கடகம்:** மனஅமைதி கிடைக்கும். வழக்கிலான காரியங்களில் முன்னேற்றம். பரிகாரம்: தேவி ஸ்லோகம் பாராயணம்.

**மகரம்:** குடும்பத்தில் புத்தாக்கம். பண வரவு சீராகும். பரிகாரம்: வினாயகர் சதுர்த்தி விரதம்மேற்கொள்க.

**சிம்மம்:** உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள். மதிப்பும், மரியாதையும் உயரும். பரிகாரம்: சூரியனை தரிசிக்கவும்.

**கும்பம்:** நண்பர்களால் உதவி. நீண்ட நாள் முயற்சி வெற்றி பெறும். பரிகாரம்: சக்தி வழிபாடு உகந்தது.

**கன்னி:** குடும்ப விவகாரங்களில் முக்கிய முடிவுகள். உளவுத்திறன் அதிகரிக்கும். பரிகாரம்: பிள்ளையாரை வழிபடவும்.

**மீனம்:** ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். மன நிம்மதி கிடைக்கும். பரிகாரம்: விஷ்ணு சாஹஸ்ரநாமம் பாராயணம்.

# இந்துசமய அறநிலையத்துறை சார்பில் அம்மன் கோவில்களுக்கு ஆன்மிக பயணம்




தஞ்சாவூர், ஜூலை 20

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் அம்மன் கோவில்களுக்கு ஆன்மிக பயணம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அதன்படி தஞ்சாவூர் மண்டலம் சார்பாக தஞ்சை பெரியகோவிலில்இருந்து ஆன்மிக பயணம் நேற்று தொடங்கியது. அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் ஜோதிலட்சுமி ஆன்மிக பயணத்தை தொடங்கி வைத்தார். இதில் 60 வயதிற்கு மேற்பட்ட 57 பேர் ஆன்மிக பயணம் சென்றனர்.

இந்த ஆன்மிக பயண குழுவினர் தஞ்சை பெரிய கோவில் வராகி அம்மன் சன்னதியில் இருந்து புறப்பட்டு, மேல வீதி பங்காரு காமாட்சி அம்மன் கோவில், புன்னைநல்லூர் மாரியம்மன், திருக்கருக்காவூர் கற்பக ரட்சாம்பிகை, பட்டீஸ்வரம் துர்க்கை அம்மன் உள்ளிட்ட கோவில்களுக்கு சென்று சாமி தரிசனம் செய்தனர்.

இதே போல் ஆடி மாதம் அனைத்து வெள்ளிக்கிழமையும் இந்த ஆன்மிக பயணம் பெரியகோவிலில் இருந்து புறப்பட்டு செல்லும். இந்த பயணம் மேற்கொள்ள விருப்பம் உள்ளவர்கள், வயதானவர்கள் அழைத்து செல்லப்படுகிறார்கள். ஆன்மிக பயணத்தில்செல்பவர்களுக்கு இந்து சமய அறநிலையத் துறை சார்பில் உணவு டீ, காபி போன்றவை வழங்கப்படுகிறது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நீலகிரி: சாலையில் உலா வந்த சிறுத்தைகள், கருஞ்சிறுத்தை பொதுமக்கள் அச்சம்




நீலகிரி, ஜூலை 20

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே வனப் பகுதியை ஒட்டி உள்ள பெரியார் நகர் கிராமத்திற்கு செல்லும் சாலையில் கடந்த சில ஆண்டுகளாக வனவிலங்குகள் நடமாட்டம் அதிகமாக காணப்படுகிறது. இந்தநிலையில் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணிக்கு அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு செல்லும் சாலையில் 2 சிறுத்தைகளுடன் கருஞ்சிறுத்தை ஒன்று என மொத்தம் 3 சிறுத்தைகள் நீண்ட தூரம் சாலையிலேயே நடந்து சென்றன. பின்னர் அருகில் இருந்த தேயிலை தோட்டத்திற்குள் சென்றது. இதைத்தொடர்ந்து அதே தினம் இரவு 8.30 மணிக்கு அதே சாலையில் 3 சிறுத்தைகள் ஒன்றன் பின் ஒன்றாக நடந்து சென்றன. இதேபோல நேற்று அதிகாலை 4.30 மணிக்கு சிறுத்தைகள் அப்பகுதியில் உலா வந்தன. இதனால் பொதுமக்கள் அச்சம் அடைந்து உள்ளனர். மேலும் தொடர்ந்து உலா வரும் சிறுத்தைகளின் நடமாட்டத்தை கண்காணித்து, அவற்றை அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# தூத்துக்குடி: போக்சோ வழக்கு குற்றவாளிக்கு 3 ஆண்டுகள் சிறை, ரூ.12 ஆயிரம் அபராதம்

தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2020ம் ஆண்டு 6 சிறுமிகளிடம் பாலியல் செய்கை செய்த வழக்கில் கழுகுமலை பகுதியைச் சேர்ந்த முத்தையா மகன் ஏசுராஜ் (வயது 54) என்பவரை கழுகுமலை காவல் நிலைய போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர். இந்த வழக்கின் விசாரணை தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி பிரீத்தா நேற்று குற்றவாளியான ஏசுராஜ் என்பவருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.12,000 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார். இவ்வழக்கை சிறப்பாக புலனாய்வு செய்த அப்போதைய கழுகுமலை காவல் நிலைய இன்ஸ்பெக்டர் கஸ்தூரி, குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர நீதிமன்றத்தில் திறம்பட வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் முத்துலட்சுமி, விசாரணைக்கு உதவியாக இருந்த ஏட்டு சேதுராஜன் ஆகியோரை மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பாராட்டினார்.

# உலக சாம்பியன்ஸ் ஆப் லெஜெண்ட்ஸ் லீக்: இங்கிலாந்தை வீழ்த்திய பாகிஸ்தான்



ஓய்வு பெற்ற கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்கும் 2வது உலக சாம்பியன்ஸ் ஆப் லெஜெண்ட்ஸ் டி20 லீக் தொடர் நேற்று தொடங்கியது. இதில் நடப்பு சாம்பியன் இந்தியா, இங்கிலாந்து, பாகிஸ்தான், வெஸ்ட் இண்டீஸ், தென் ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய 6 அணிகள் கலந்து கொண்டுள்ளன.

இந்தசீசன்இங்கிலாந்தில்உள்ளபிர்மிங்காம்,நார்தாம்டன், லெய்செஸ்டர் மற்றும் லீட்ஸ் ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளது. ஆறு அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடர் ரவுண்ட்ராபின் வடிவத்தில் நடைபெறும். இதன் முடிவில் புள்ளி பட்டியலில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இதில் தொடக்க நாளான நேற்று நடைபெற்ற முதல் ஆட்டத்தில் இயான் மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து சாம்பியன்ஸ் அணி, ஷாகித் அப்ரிடி தலைமையிலான பாகிஸ்தான் சாம்பியன்சை எதிர்கொண்டது. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் 20 ஓவரில் 9 விக்கெட்டை இழந்து 160 ரன்கள் எடுத்தது.

தொடர்ந்து 161 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த இங்கிலாந்து அணி 20 ஓவரில் 3 விக்கெட்டை இழந்து 155 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 5 ரன் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் தொடரை வெற்றியுடன் தொடங்கி உள்ளது. இந்த தொடரில் இன்று 2 லீக் ஆட்டங்கள் நடைபெறுகின்றன. அதில் வெஸ்ட் இண்டீஸ் தென் ஆப்பிரிக்கா அணிகளும், ஆஸ்திரேலியா இங்கிலாந்து அணிகளும் மோத உள்ளன.

# 4வது டெஸ்ட் போட்டியில் குல்தீப் யாதவ் ஆட வேண்டும் ஆஸி. முன்னாள் கேப்டன்



இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 3 போட்டிகளின் முடிவில் இந்திய அணி 12 என்ற கணக்கில் பின்தங்கி உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் மோதும் 4வது போட்டி வரும் 23ம் தேதி தொடங்க உள்ளது.

தொடரை வெல்லும் வாய்ப்பில் நீடிக்க இந்த 4வது டெஸ்டில் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற நெருக்கடிக்குள் இந்திய அணி தள்ளப்பட்டுள்ளது. இதனால் இந்த போட்டிக்கான இந்திய அணியில் மாற்றங்கள் இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், 4வது டெஸ்ட் போட்டியில் இந்திய பிளேயிங் லெவனில் குல்தீப் யாதவ் இடம் பெற வேண்டும் என ஆஸ்திரேலிய முன்னாள் கேப்டன் மைக்கேல் கிளார்க் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, 3வது போட்டியில் விளையாடிய விதத்திற்குஇந்தியாதங்களுடையதலையைபெருமையுடன்நிமிர்த்தலாம்.குறிப்பாகஜடேஜாசிறப்பாகவிளையாடினார்.

ஆனால் ஏற்கனவே நான் குல்தீப் யாதவ் பிளேயிங் லெவனில் எப்படியாவது விளையாட வேண்டும் வெளிப்படையாக தெரிவித்துள்ளேன். அவரைக் கொண்டு வாருங்கள். ஆனால் எப்படி என்பது எனக்குத் தெரியாது. ஏனெனில் வாஷிங்டன் சுந்தர் சிறப்பாக பவுலிங் செய்து கணிசமான ரன்கள் குவித்தார். அதே போல ஜடேஜா அபாரமாக பேட்டிங் செய்தார். கடந்தக்காலங்களில்நிறையபோட்டிகளில்அவர்இக்கட்டானசூழ்நிலைகளில்இந்தியாவைவெற்றிபெறவைத்துள்ளார்.

கடந்தப்போட்டியில்எதிர்ப்புறம்யாராவதுவிக்கெட்டைவிடாமல்விளையாடிருந்தால்ஜடேஜாஜடேஜாஇந்தியாவை வெற்றி பெற வைத்திருப்பார். ஆனால் போராடித் தோல்வியை சந்தித்த அவருக்காகவும் இந்தியாவுக்காகவும் நான் வருந்தினேன் .அது போன்ற போட்டிகள் உங்களுக்கு வருத்தத்தைக் கொடுக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# சுவிஸ் ஓபன் டென்னிஸ்: காலிறுதியில் தோல்வி கண்ட கேஸ்பர் ரூட்



சுவிட்சர்லாந்தில் ஏ.டி.பி. டென்னிஸ் தொடர் நடந்து வருகிறது. இதில் முன்னணி வீரர்கள் பலர் கலந்து கொண்டு ஆடி வருகின்றனர். இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் நார்வேயின் கேஸ்பர் ரூட், அர்ஜெண்டினாவின் ஜுவான் மானுவல் செருந்தோலோ உடன் மோதினார்.

இந்த போட்டியில் எளிதில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறுவார் என எதிர்பார்க்கப்பட்ட கேஸ்பர் ரூட், யாரும் எதிர்பார்க்காத வண்ணம் 26, 61, 36 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வி கண்டு தொடரில் இருந்து வெளியேறினார்.

# முதல் பாலிவுட் படம் வெளியாவதற்கு முன்பே அடுத்ததா?... ஸ்ரீலீலாவுக்கு அடித்த ஜாக்பாட்



தென்னிந்திய சினிமாவில் மட்டுமில்லாமல், பாலிவுட்டிலும் ஸ்ரீலீலா பிரபலமாகி வருகிறார். தற்போது அவர் ரன்வீர் சிங்குக்கு ஜோடியாகஒருபுதியபடத்தில்நடிக்கவுள்ளதாகதகவல்வெளியாகி இருக்கிறது.

தனது முதல் பாலிவுட் படம் வெளியாவதற்கு முன்பே, ஒரு பெரிய படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளதாக தெரிகிறது. பாபி தியோல் மற்றும் ரன்வீர் சிங் நடிக்கும் ஒரு படத்தில் ஸ்ரீலீலா முன்னணி நடிகையாக நடிக்க உள்ளதாகக் கூறப்படுகிறது.

விரைவில், அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.ஸ்ரீலீலாபாலிவுட்டில்கார்த்திக்ஆர்யனுக்கு ஜோடியாக அறிமுகமாக இருக்கிறார். இப்படம் இந்தாண்டு தீபாவளிக்கு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபுறம் பவன் கல்யாணுடன் "உஸ்தாத் பகத் சிங்", ரவி தேஜாவுடன் "மாஸ் ஜதாரா" மற்றும் தமிழில் "பராசக்தி" ஆகிய படங்களிலும் ஸ்ரீலீலா நடித்து வருகிறார்.

# தேசிய விருது இயக்குனரின் புதிய படத்தில் நாயகியாகும் ரெஜினா




ராக்கெட் பாய்ஸ் போன்ற பிரபல ஹிந்தி வெப் சீரிஸ் மற்றும் திரைப்படங்களில் தனது துடிப்பான நடிப்பால் கவனம் பெற்ற ரெஜினா, இந்திய சினிமாவின் முக்கியமான இயக்குநர்களில் ஒருவரான மதுர் பந்தார்க்கருடன் புதிய படத்தில் நடிக்க தயாராக இருக்கிறார். இந்த புதிய திரைப்படம் "தி வைவ்ஸ்" எனும் தலைப்பில் உருவாகிறது.

உணர்வுமிக்க, சிக்கலான கதாபாத்திரங்களை நம்பிக்கையுடன் சித்தரித்து வரும் ரெஜினா, இந்த படத்திலும் ஒரு முக்கியமான கதாநாயகி வேடத்தில் நடிக்கவுள்ளார். இது அவருடைய திறமைகளை மேலும் வெளிக்கொண்டு வரும் ஒரு வாய்ப்பாக பார்க்கப்படுகிறது.

தேசிய விருது பெற்ற இயக்குநர் மதுர் பந்தார்க்கர், பேஷன், ஹீரோயின் போன்ற படங்களில் பெண்களின் உணர்வுகளையும் வாழ்க்கை பாதைகளையும் மையமாகக் கொண்டு கதைகளை இயக்கி உள்ளார். தற்போது, தி வைவ்ஸ் மூலமாக மீண்டும் அதே பாதையைத் தொடர்கிறார். இந்தப் படம், பெண்களின் வலிமை, உணர்வுகளின் அடுக்கு அடுக்கான வெளிப்பாடுகள் மற்றும் தைரியமான பார்வைகளைக் கூறும் திரைப்படமாக இருக்குமென சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ரெஜினாவின் சகஜமான திரை நடிப்பு, மதுர் பந்தார்க்கரின் வலுவான கதை சொல்லும் பாணி ஆகியவை இணைந்து, தி வைவ்ஸ் என்ற திரைப்படத்தை எதிர்பார்க்கத்தக்க ஒரு முக்கிய படமாக மாற்றி உள்ளன.

# கனவில் வந்த அம்மன் திருப்பணிக்கு மடிப்பிச்சை எடுக்கும் நடிகை நளினி



தமிழ் திரையுலகில் 1980 மற்றும் 90களில் முன்னணி கதாநாயகியாக வலம் வந்த நளினிநடிகரும்,டைரக்டருமானராமராஜனைகாதலித்துதிருமணம்செய்துகொண்டார். பின்னர் இருவரும் கருத்து வேறுபாடு காரணமாக விவாகரத்து செய்து பிரிந்தனர். தற்போது தொலைக்காட்சி தொடர்களில் நடித்து வருகிறார் நளினி.

நடிகை நளினி அடிக்கடி கோவில்களுக்கு செல்வதை வழக்கமாக கொண்டுள்ளார். அவர் குறிப்பாக திருமீயச்சூர் லலிதாம்பிகை கோவில் மற்றும் திருவேற்காடு தேவி கருமாரி அம்மன் கோவில்களுக்கு சென்று வழிபட்டுள்ளார். இந்தநிலையில், ஆடி மாதம் பிறந்ததையொட்டி திருவேற்காடு தேவி கருமாரி அம்மன் கோவிலில் வழிப்பட்ட பின் கோவில் வளாகத்தில் நின்று மடிப்பிச்சை ஏந்தினார். அம்மன் தனது கனவில் வந்து எனக்காக என்ன செய்யப் போகிறாய் என கேட்டதால் மடிப்பிச்சை ஏந்தி அதில் வரும் காணிக்கையை திருப்பணிக்கு வழங்குவதாக விளக்கம் அளித்துள்ளார்.

**NAMADHU DHINA KANI**
**Canara Bank**
**Account: 120028528266**
**IFSC code: CNRB0001041**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.